අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/14/04/04
ඔබේ අංකය / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2023. 10. 23

சுற்றறிக்கை இலக்கம், 36/2023

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்(அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகள்),
சகல பரிவேனாதிபதிகள் (கல்விப் பிரிவெனா)

## இளம் விஞ்ஞானி ஆராய்ச்சிப் போட்டி-2023-
## ஆலோசனை மற்றும் தகவல் படிவம்

அறிமுகம்

இருபத்தியோராம் நூற்றாண்டின் சவால்களை முறியடிக்க, விஞ்ஞான அறிவும், புத்தாக்கத்துடன் சிந்திக்கும் திறனும் கொண்ட எதிர்கால தலைமுறையை உருவாக்குவதே விஞ்ஞானக் கல்வியின் முதன்மைப் பணியாகும். இதன்படி, மாணவர்களிடம் விஞ்ஞான சிந்தனை மற்றும் ஆய்வுக் கலாசாரத்தை பாடசாலைகளில் உருவாக்கும் நோக்கில் 2023ஆம் ஆண்டு முதல் இளம் விஞ்ஞானி ஆராய்ச்சிப் போட்டியை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் பிராந்தியக் கல்வி அலுவலகங்கள் திட்டமிட்டுள்ளன.

**2.0** நோக்கங்கள்

1. மாணவர்களின் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்துதல
2. மாணவர்களின் சிக்கல்களைத் தீர்க்கும் மற்றும் தகவல் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துதல
3. மாணவர்களின் விஞ்ஞானபூர்வமான தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துதல
4. பாடசாலை சமூகங்களிடையே ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குதல

- ஆய்வுக் களம்

  மாணவர் ஆராய்ச்சியை பின்வரும் ஒரு விடயப்பரப்பை தழுவும்படி மேற்கொள்ளலாம்

- சுற்றுச்சூழல் விஞ்ஞானம் (Environmental Science)
- உயிரியல் விஞ்ஞானம் (Life Science)
- பௌதீகவியல் (Physics)
- கணினி விஞ்ஞானம் (Computer Science)
- இரசாயணவியல் (Chemistry)

3.1 மாணவர் ஆராய்ச்சியின் மதிப்பீட்டில் பின்வரும் அளவுகோல்கள் பயன்படுத்தப்படும

- **Explaining the statement of problem**
  ஆராய்ச்சி தலைப்பு/சிக்கல் விளக்கம்.
- **Justification of method**
- ஆராய்ச்சிக்கான உத்திகள் மற்றும் தொழில்நுட்பங்களை நியாயப்படுத்துதல்
- **Results and Conclusion**
  முடிவுகள்
- **Novelty of concepts and students originality of work**
- கருத்துகளின் புதுமை மற்றும் மாணவர்களின் ஆராய்ச்சி என உறுதிப்படுத்தல்
  **Presentation skills**
  முன்வைக்கும் திறன்
- **Discussion with the jury**
  நிபுணத்துவ குழுவுடன் உரையாடல்

இந்த விளக்கக்காட்சிக்கு (presentation)15 விநாடிகளும் மற்றும் ஆராய்ச்சி 10 நிமிடங்களும் உரித்தாகும்

3.2 போட்டிக்கு மாணவர்கள் எவ்வாறு குழுவாக உள்ளனர்

| தொகுதி | உரிய தரம் |
|---|---|
| I தொகுதி | 6 - 9 தரம் |
| II தொகுதி | 10- 13 தரம் |

- இங்கு மாணவர்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக ஆராய்ச்சியை முன்வைக்கலாம். குழுக்களாக முன்வைக்கும்போது குழுவில் அதிகபட்சமாக 5 உறுப்பினர்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும்.

சமர்ப்பிக்கும் மொழிமூலம் - சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் என எந்த மொழி மூலமாகவும் இருக்கலாம்.

**4.0 மாணவர்களை தெரிவுசெய்தல்**

4.1 பாடசாலை மட்டம்

ஒவ்வொரு மாணவரும் ஏதேனும் அலலது அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும். அதன்படி, பாடசாலை அளவில் நடத்தப்படும் ஆய்வுகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட மாட்டாது.

**4.2** வலய மட்ட போட்டி

ஒவ்வொரு பிரிவின் கீழும் பாடசாலை மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியின் மதிப்பீட்டிற்கு தகுந்த குழுவொன்று நியமிக்கப்பட்டு அதற்குரிய அளவுகோல்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

இதன்போது ஒவ்வொரு வலயம் மூலமாகவும் ஒவ்வொரு தொகுதியின் கீழும் 06 உகந்த நிலை ஆய்வுகளைத் தேர்ந்தெடுத்து மாகாணப் போட்டிக்கு முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

4.3 மாகாண மட்ட போட்டி

வலய மட்டத்தில் முன்வைக்கபபட்ட ஆய்வு அறிக்கைகளை மதிப்பிடுவதற்கு மாகாண மட்டத்தில் பொருத்தமான குழுவொன்று நியமிக்கப்பட்டு முன்மொழிவுகள் உரிய அளவுகோல்களின்படி மதிப்பீடு செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவின் கீழும் சிறந்த மட்டத்தில் 06 ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டு தேசிய போட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். .

4.4 தேசிய மட்டத்திலான போட்டிகள்

- தேசிய போட்டிகள் நடாத்தப்படும் திகதி மற்றும் இடம் கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

- இதன்போது மாணவர் அல்லது மாணவர் குழு தேசிய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஆராய்ச்சி குறித்தும் நிபுணர் குழு முன் விளக்கமளிக்க வேண்டும்.இதற்கு மைக்ரோசா.'.ப்ட் பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியைப் பயன்படுத்த வேண்டும்.

கால சட்டகம்

வலய போட்டிகள் - அக்டோபர் : 30க்கு முன்

மாகாண போட்டிகள் - நவம்பர் : 20க்கு முன்

முக்கிய விடயங்கள்

இந்த சுற்றறிக்கையின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அது தொடர்பாக கல்வி செயலாளரின் முடிவே இறுதி முடிவாகும்

இந்த அறிவுறுத்தல்களின்படி, தங்கள் கல்லூரி/பிராந்திய/மாகாண மாணவர்களிடையே விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என நம்புகிறேன். இலங்கை மாணவர்களின் எதிர்கால மேம்பாட்டிற்காக ஆற்றும் இப்பணி தொடர்பாக தாங்கள் வழங்கும் தீவிர பங்களிப்பை நான் பெரிதும் மதிக்கின்றேன்.

எம்.என்.ரணசிங்க

கல்வி செயலாளர்